[2004 ஜூலை 30

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியின் மையப் பகுதியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 88, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

88—

ஆரம்ப சுகாதார நிலையம்

***45270–திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, பொன்பரப்பி ஊராட்சியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், பொன்பரப்பி கிராமத்தில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக, சுகாதாரத் துறையிலே, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய நல்லாட்சியிலே, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், குறிப்பாக, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஆரம்ப

2004 ஜூலை 30]

சுகாதார நிலையங்களிலே, முழுவதுமாகப் பெண் மருத்துவர்களையே நியமனம் செய்ய, அரசு ஆவன செய்யுமா? அப்படிப் பெண் மருத்துவர்களை முழுமையாக அந்த கிராமப்புறங்களில் நியமனம் செய்கின்றபோது, அவர்களுக்கென்று அங்கே தங்குகின்ற Quarters கட்டித் தரவேண்டும். அதுமட்டுமல்லாமல், Labour ward என்று சொல்லக்கூடிய பிரசவ அறை இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அந்தப் பிரசவ அறையையும் கட்டிக் கொடுக்கின்றபோது, கிராமப்புறங்களில், எல்லா இடங்களிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணுகின்ற முழுமையான மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே, பெண் மருத்துவர்களை, முழுமையாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிட்டத்தட்ட 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தரம் உயர்த்தப்பட்ட 93 அரசு மருத்துவமனைகளிலும், ஒரு பெண் மருத்துவரை நியமிக்க உத்தரவிட்டு, அதற்கான நேர்முகத் தேர்வும் முடிவு பெற்று இருக்கிறது. தமிழகத்திலே மட்டும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால், 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இதிலே தற்சமயம் கிட்டத்தட்ட 93 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட உள்ளனர். மருத்துவர்களுக்கான இட வசதியும் வேண்டுமென்று உறுப்பினர் ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறார். தற்சமயம், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், Taluk, Non–Taluk மற்றும் மாவட்டத்தினுடைய அத்தனை மருத்துவமனைகளையும் மேம்படுத்த வேண்டும் என்பதற்காக உலக வங்கியை நாடி, அதற்கான வேலைகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. கூடிய விரைவிலே, நிதி கிடைத்தவுடனே, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.